முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 555**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

06.04.2021, செவ்வாய்கிழமை

1. பார்காக்க வந்த வள்ளலே
பரமானந்த சதாசிவ சத்குருவே
பாருலகை தர்மலோகமாக்கி
பசிபிணி விரட்டி உலகோருக்கு
2. உலகோருக்கு ஞானபலம் தரவந்த
உயர்ஞானியே ஆறுமுக அரங்கனே
அரங்கனே உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசி
அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
3. வரங்கள் பெற்று எந்தன் தயவாலே
வடிவேலன் என் சக்தியாகவே வந்த அரங்கனே
அரங்கனே உன்னருள் பெற்ற மக்களுக்கு
அழியாமை என்பது சடுதி உறுதி
4. உறுதிதந்து உன்தர்மம் உலகமக்களை
உயர்வழி காட்டி வர
ஆறுமுகா என உன்னை வணங்கிவரும் மக்களுக்கு
அகிலத்தில் பிறவாத பெரும்பேறு உறுதிஉறுதி
5. உறுதிதந்து உன் கொள்கை வழியே யான்
உலகை காத்து வருதல் காண
கருதியே ஆறுமுகஞானி உன் ஓங்காரக்குடிலை கண்டடைந்து இணைந்து கலந்து
உன் தர்மத்தில் தொண்டர்களாகி பொருளுதவி செய்து வரும் மக்கள் மூலம்
6. மூலமாக இந்த கலியுகத்தை மாற்றுவேன்
முழுமைகொண்ட ஞான யுகமாக்குவேன்
ஆறுதலும் நல்ல மாறுதலும் தரவந்த மகாயோகி
அரங்கன் உன் தொடர்பால் உலகோர் உயர்வர்
7. உயர்வான உன் சக்தி மூலம்
உலக மக்கள் அனைத்துபேரும் கடைத்தேறி
கலகமிடர் துன்பமில்லாத கண்ணியமான
ஞானவான்களாக தர்மவான்களாக சிறந்து
8. இந்த கலியுகத்தில் செப்பிடுவேன் ஞான யுகவாழ்வுக்கு தகுதிபெறும்
ஆறுமுகனே அரங்கனே உன் தர்மம் உலகை வெல்லும்
அண்ணலே வாழுகின்ற ஞானியே
உன்கொள்கை இந்த உலகை ஆளும்

ஞான அறிவுரை ஆசி முற்றே –சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.